இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41எ(1) எனும் உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்புப் பேரவையின் ஐந்தாவது அறிக்கை

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்கானது

உள்ளடக்கம்

1. அறிமுகம் 1

2. பேரவையின் கூட்டங்கள் 1

3. அரசியலமைப்புப் பேரவைக்கான செயலாளர் நாயகம் 1

4. அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகளும் பணிகளும் 2

4.1. அரசாங்க சேவை ஆணைக்குழு 2

4.2. எல்லை நிர்ணய ஆணைக்குழு 3

5. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகளும் பணிகளும் 4

5.1. உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கான நியமனம் 4

5.2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கான நியமனம் 4

5.3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவிக்கான நியமனம் 5

5.4. கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கான நியமனம் 7

6. அரசியலமைப்பு நீங்கலாக, எழுத்திலான சட்டங்களின் மூலம் அரசியலமைப்புப் பேரவைக்குச் சாட்டப்படும் அல்லது குறித்தொதுக்கப்படும் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றல் 9

6.1. நலனோம்புகை நன்மைகள் சபைக்கான (WBB) உறுப்பினர்களின் நியமனம் 9

6.2. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (OMP) உறுப்பினர்களின் நியமனம் 9

6.3. இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கான உறுப்பினர்களின் நியமனம் 10

6.4. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் 10

6.5. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (இபொஆ) உறுப்பினர் பதவிற்கான நியமனம் 12

6.6. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்திற்கான பேரவையின் விதப்புரை 13

6.7. பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவுக்கான (NCW) உறுப்பினர்களின் நியமனம் 14

7. பேரவையின் கடமைகளையும் செயற்பாடுகளையும் செயற்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான விதிகளை உருவாக்குதல் 15

8. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்திற்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல் 15

9. பேரவையின் உறுப்பினர்களைப் பிரதிவாதியாகப் பெயரிட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள் 16

1. அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் (இதனகத்துப்பின்னர் 'அரசியலமைப்பு' எனவும் குறிப்பீடுசெய்யப்படும்) ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவைக்கு (இதனகத்து பின்னர் 'பேரவை' எனவும் குறிப்பீடு செய்யப்படும்), அரசியலமைப்பினாலும் ஏனைய சட்டங்களினாலும் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை ஆற்றவும் நிறைவேற்றவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 41எ (1) என்னும் உறுப்பிரையின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் பேரவையினால் ஆற்றப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் இந்த அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2. பேரவையின் கூட்டங்கள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், அரசியலமைப்புப் பேரவையானது பின்வரும் இருபது (20) தினங்களில் கூடியது:-

03.01.2025, 07.01.2025, 10.01.2025, 23.01.2025, 05.02.2025, 14.02.2025, 16.02.2025, 19.02.2025, 05.03.2025, 06.03.2025, 11.03.2025, 12.03.2025, 28.03.2025, 22.04.2025, 08.05.2025, 20.05.2025, 21.05.2025, 22.05.2025, 13.06.2025, 18.06.2025

3. அரசியலமைப்புப் பேரவைக்கான செயலாளர் நாயகம்

- அரசியலமைப்புப் பேரவைக்கான தற்போதைய செயலாளர் நாயகம், 2025 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில், சமர்ப்பித்த அவரது இராஜினாமா கடிதத்தை, அரசியலமைப்புப் பேரவை, 2025 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி கூடிய அதனது கூட்டத்தின்போது கருத்திற்கொண்டது. அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம் திரு. தம்மிக்க தசநாயக்க அவர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பாராளுமன்ற அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம் மற்றும் அரசியலமைப்புப் பேரவைக்கான செயலாளர் நாயகம் ஆகிய பதவிகளை வகித்து, அவர் வழங்கிய சேவையை பேரவை பாராட்டியது.
- அதே கூட்டத்தில், அரசியலமைப்புப் பேரவைக்கான செயலாளர் நாயகம் பதவிக்குப் பொருத்தமான/நிரந்தரமான ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை, 2025 ஆம் ஆண்டு மே

மாதம் 14 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் பாரளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் திரு. ஹன்ஸ அபேரத்ன அவர்களை, அரசியலமைப்பு பேரவைக்கான செயலாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக பேரவை ஏகமனதாகத் தீர்மானித்து நியமித்தது.

4. அரசியலமைப்பின் 41ஆ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகளும் பணிகளும்

4.1. அரசாங்க சேவை ஆணைக்குழு

- பேரவையானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தின்போது, அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர் பதவிக்கு நியமனம் செய்வது தொடர்பில் 2025.01.07 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் மதிப்பீட்டு அறிக்கையைப் பரிசீலித்தது.

  அதன்படி, விண்ணப்பதாரிகளின் தகைமைகள், பொருத்தப்பாடு மற்றும் தகுதிகள் குறித்தும், அத்துடன் ஆணைக்குழுவின் தற்போதைய அமைப்பில் அதன் விடயப் பரப்புக்குள் வரும் பல்வேறு தொழில்சார் சேவைகளின் பிரதிநிதித்துவம் குறித்தும் பரிசீலித்த பின்னர், திரு. சந்திரரத்ன பல்லேகம அவர்கள் இராஜினாமா செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, பொறியியலாளர் (கலாநிதி) ப்ரீத்தி சனத் பன்னாவென்னகே அவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு நியமிக்க பேரவை ஏகமனதாகத் தீர்மானித்து, பரிந்துரைத்தது.

- அரசியலமைப்பின் 54(4) என்னும் உறுப்புரையின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து அதன் உறுப்பினரான திரு. என்.எச்.எம். சித்ரானந்த அவர்களை நீக்குவதற்கான கௌரவ சனாதிபதியின் பரிந்துரைக்கு பேரவையின் அங்கீகாரத்தைக் கோரி சனாதிபதியின் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தொடர்பாடலை, 2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை பரிசீலித்தது.

- அரசியலமைப்புப் பேரவையானது கௌரவ சனாதிபதி அவர்களின் பரிந்துரையையும் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள காரணங்களையும் பரிசீலித்த பின்னர், அரசியலமைப்பின் 41ஆ (5) மற்றும் 54(4) என்னும் உறுப்புரைகளின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு. என்.எச்.எம். சித்ரானந்த அவர்களை நீக்குவதற்கான சனாதிபதி அவர்களின் பரிந்துரையை ஏகமனதாக அங்கீகரித்தது.

- மேற்குறித்த உறுப்பினர் அகற்றப்படுவதன் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் எழும் பதவி வெற்றிடத்தை கருத்திற்கொண்ட பேரவை, குறித்த பதவிக்கு புதிய ஒரு விளம்பரத்தின் ஊடாக விண்ணப்பங்களைக் கோருவதற்குத் தீர்மானித்தது.

- 2025 மார்ச் 05 ஆம் திகதி நடைபெற்ற பேரவையின் கூட்டத்தில், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. சனத் ஜயந்த எதிரிவீர வெளிநாடு செல்லும் காலமான 2025.03.02 ஆம் திகதி முதல் 2025.03.14 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிப்பதற்குப் பொருத்தமான பரிந்துரையைக் கோரி சனாதிபதியின் செயலாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொடர்பாடலை பேரவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதுடன், குறித்த காலப்பகுதியில் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் என். செல்வக்குமாரன் அவர்கள் அப்பதவியில் பதில் கடமையாற்ற தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார் எனவும் பேரவைக்கு மேலதிகமாகத் தெரிவிக்கப்பட்டது.

  அதன்படி, பரிசீலனைக்கு எடுத்த பின்னர், அரசியலமைப்பின் 41ஆ (1) மற்றும் 41ஆ (2) ஆம் உறுப்புரைகளின் கீழ், ஆணைக்குழுவின் தலைவர் திரு. சனத் ஜயந்த எதிரிவீர வெளிநாடு செல்லும் 2025.03.02 ஆம் திகதி முதல் 2025.03.14 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு பேராசிரியர் என். செல்வக்குமாரன் அவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்க பேரவை ஏகமனதாகப் பரிந்துரைத்தது.

4.2. எல்லை நிர்ணய ஆணைக்குழு

- எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கான நியமனம் தொடர்பாக சனாபதியின் செயலாளரிடமிருந்து 2025.01.10 ஆம் திகதி கிடைத்த தொடர்பாடலை, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை கருத்திற்கொண்டது. அதற்கிணங்க, 2025.01.20 ஆம் திகதி முதல் 2025.02.13 ஆம் திகதி வரையான காலப்பகுதிற்கு, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினரான கலாநிதி திருமதி ஏ.டீ. பண்டாரநாயக்க அவர்களை பேரவை பரிந்துரைத்தது.

5. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகளும் பணிகளும்

5.1. உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கான நியமனம்

- உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான கௌரவ நீதியரசர் ஆர்.எம். சோபித்த ராஜகருணா அவர்களையும், கௌரவ நீதியரசர் மேனகா விஜேசுந்தர அவர்களையும், கௌரவ நீதியரசர் எஸ்.பீ. அபயகோன் அவர்களையும் கௌரவ நீதியரசர் எம்.எஸ்.கே.பீ.விஜேரத்ன அவர்களையும் நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ (1) மற்றும் 107 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் சனாதிபதி செய்த பரிந்துரைகளை, பேரவை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தில் பரிசீலித்தது.

  அரசியலமைப்பின் 41இ (4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ பிரதம நீதியரசர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துரைகளையும் பெயர்குறிக்கப்பட்டவர்களின் தகைமைகளையும் சேவைமூப்பையும் பரிசீலித்ததன் பின்னர், பேரவை, உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான கௌரவ நீதியரசர் ஆர்.எம்.சோபித்த ராஜகருணா அவர்களையும், கௌரவ நீதியரசர் மேனகா விஜேசுந்தர அவர்களையும், கௌரவ நீதியரசர் எஸ்.பீ. அபயகோன் அவர்களையும் கௌரவ நீதியரசர் எம்.எஸ்.கே.பீ.விஜேரத்ன அவர்களையும் அரசியலமைப்பின் 41இ (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் நியமிப்பதற்கு சனாதிபதி அவர்கள் செய்த பரிந்துரைகளை ஏகமனதாக அங்கீகரித்தது.

5.2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கான நியமனம்

- கௌரவ சனாதிபதி அவர்கள் 2025.02.01 ஆம் திகதி முதல் 2025.06.15 ஆம் திகதி வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் கௌரவ நீதியரசர் என்.பீ.பி.டீ.எஸ். கருணாரத்ன அவர்களுக்கு, ஓய்வூதியத்திற்கு முந்திய விடுமுறையைப் பெற்றுக்கொள்ள அனுமதியளித்துள்ளதால், 2025.02.16 ஆம் திகதி முதல் 2025.06.15 ஆம் திகதி வரையான காலப்பகுதிற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கௌரவ நீதியரசர் கௌரவ எம்.ஈ.எம். லபார் அவர்களை, அரசியலமைப்பின் 41இ (2) மற்றும் 109(1) உறுப்புரைகளின் பிரகாரம் நியமிப்பதற்கு கௌரவ சனாதிபதி அவர்கள் செய்த ஒரு பரிந்துரையை பேரவை பரிசீலித்தது.

அரசியலமைப்பின் 41இ (4) ஆம் உறுப்புரையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கௌரவ பிரதம நீதியரசரின் கருத்துக்களையும், அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தலையும் பேரவை பரிசீலித்தது.

2025 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 16 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை இது தொடர்பாக விரிவாக பரிசீலித்ததன் பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் கௌரவ நீதியரசர் என்.பீ.பி.டீ.எஸ். கருணாரத்ன அவர்களுக்கு, ஓய்வூதியத்திற்கு முந்திய விடுமுறை வழங்கப்பட்டுள்ள 2025.02.16 ஆம் திகதி முதல் 2025.06.15 ஆம் திகதி வரையான காலப்பகுதிற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில் கடமையாற்றும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கௌரவ நீதியரசர் எம்.ரீ.எம். லாபிர் அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதி அவர்களின் பரிந்துரையை அங்கீகரிக்க, பேரவை அதன் பெருன்பான்மையால் தீர்மானித்தது.

- அரசியலமைப்பின் 41இ (1) மற்றும் 107(1) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிற்கு, சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதியும் சனாதிபதி சட்டத்தரணியுமான திரு. நலின் ரொஹாந்த அபேசூரிய அவர்களை நியமிக்க கௌரவ சனாதிபதி விடுத்த பரிந்துரையை பேரவை 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

  கூறப்பட்ட பரிந்துரையுடள் அரசியலமைப்பின் 41இ (4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ பிரதம நீதியரசர் அவர்களிடம் பெற்றுக்கொண்ட கருத்துரைகளை பரிசீலித்த பின்னர் பேரவை, அரசியலமைப்பின் 41இ (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு, சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதியும் சனாதிபதி சட்டத்தரணியுமான திரு. நலின் ரொஹாந்த அபேசூரிய அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் பரிந்துரையை ஏகமனதாக அங்கீகரித்தது.

5.3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவிக்கான நியமனம்

- அரசியலமைப்பின் 41இ (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான திரு. கே.எம்.எஸ். திஸாநாயக்க அவர்களையும் திரு. ஆர்.பி. ஹெட்டிஆராச்சி அவர்களையும் நியமிப்பதற்கு, கௌரவ சனாதிபதி அவர்களிடமிருந்து கிடைத்த பரிந்துரைகளை பேரவை பரிசீலித்தது.

அரசியலமைப்பின் 41இ (4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ பிரதம நீதியரசர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துரைகளையும் பெயர்குறிக்கப்பட்டவர்களின் தகைமைகளையும் சேவைமூப்பையும் பரிசீலித்ததன் பின்னர் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் திகதி கூடிய அதன் கூட்டத்தின்போது, அரசியலமைப்பின் 41இ என்னும் உறுப்புரையின் பிரகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான திரு. கே.எம்.எஸ். திஸாநாயக்க அவர்களையும் திரு. ஆர்.பி. ஹெட்டிஆராச்சி அவர்களையும் நியமிப்பதற்கான கௌரவ சானாதிபதி அவர்களின் பரிந்துரைகளை பேரவையின் அங்கத்தவர்களில் பெரும்பான்மையினர் அங்கீகரித்தனர்.

- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியில் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்கு, உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான திரு. டபிள்யு.கே.எஸ்.யு. பிரேமசந்திர அவர்களையும், திரு. கே. பிரியந்த பெர்னாந்து அவர்களையும் திரு. ஏ.பிரேமசங்கர் அவர்களையும் நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ (1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ சனாதிபதி அவர்கள் மேற்கொண்ட பரிந்துரைகளை, பேரவை 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆம் திகதிய கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

  அதற்கிணங்க, அரசியலமைப்பின் 41இ(4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ சனாதிபதி அவர்களின் பரிந்துரைகளை, கௌரவ பிரதம நீதியரசர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துரைகளுடன் பரிசீலித்த பேரவை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு, அரசியலமைப்பின் 41இ(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகளான திரு. டபிள்யு.கே.எஸ்.யு. பிரேமசந்திர அவர்களையும், திரு. கே. பிரியந்த பெர்னாந்து அவர்களையும் திரு. ஏ. பிரேமசங்கர் அவர்களையும் நியமிப்பதற்கான பரிந்துரைகளை ஏகமனதாக அங்கீகரித்தது.

- மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு, உயர் நீதிமன்ற நீதிபதிகளான திரு டீ.எப்.எச். குணவர்த்தன அவர்களையும் மற்றும் திரு ஏ.கே.எம். பட்டபெந்தி அவர்களையும் நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ(1) எனும் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ சனாதிபதி வழங்கிய விதப்புரைகளை, 2025 ஜூன் 13 அன்று கூடிய பேரவையின் கூட்டத்தில் பேரவை பரிசீலித்தது.

அதற்கிணங்க, கௌரவ சனாதிபதியின் விதப்புரைகளுடன் சேர்த்து, அரசியலமைப்பின் 41இ (4) என்னும் உறுப்புரையின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட கௌரவ பிரதம நீதியரசரின் கருத்துக்களைப் பரிசீலித்த பேரவை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி பதவிக்கான வெற்றிடங்களுக்கு, அரசியலமைப்பின் 41இ (1) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகளான திரு டீ.எப்.எச். குணவர்த்தன அவர்களையும் மற்றும் திரு ஏ.கே.எம். பட்டபெந்தி அவர்களையும் நியமிப்பதற்கான விதந்துரைப்புகளை ஏகமனதாக அங்கீகரித்தது.

5.4. கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கான நியமனம்

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரை நிரந்தரமாக நியமிக்கும் வரை, 2025.04.23 தொடங்கி முப்பது (30) நாள் காலப்பகுதியொன்றுக்கு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் பணிபுரியும் வகையில், சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியான திரு ஜி.எச்.டீ. தர்மபால அவர்களை நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ சனாதிபதி அவர்கள் வழங்கிய விதந்துரையினைப் பேரவை 2025 ஏப்ரல் 22 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

  பேரவை, கலந்துரையாடியதன் பின்னர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரை நிரந்தரமாக நியமிக்கும் வரை, 2025.04.23 தொடங்கி முப்பது (30) நாள் காலப்பகுதியொன்றுக்கு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் பணிபுரியும் வகையில், சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியான திரு ஜி.எச்.டீ. தர்மபால அவர்களை நியமிப்பதற்கு, கௌரவ சனாதிபதி வழங்கிய விதந்துரையினை அங்கீகரிப்பதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு, அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், திரு புஷ்பிக்க சந்தன ஹேவா தொன்தலிகே அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை பேரவை 2025 மே 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கூடிய அதன் கூட்டங்களின்போது பரிசீலித்தது.

  அதற்கிணங்க, பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரின் சுயவிபரங்களையும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அவரின் முன்னைய தொழிலின் போது கொண்டிருந்த தகைமைகள் மற்றும் அனுபவங்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்படுவதற்காகத் தேவைப்படுத்தப்படும் கல்வித் தகைமைகளையும் தொழில்முறைத் தகைமைகளையும் பேரவை பரிசீலித்த பின்னர், அரசியலமைப்பின்

41இ (1) மற்றும் 41உ எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிற்கு திரு புஷ்பிக்க சந்தன ஹேவா தொன்தலிகே அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதி அவர்களின் விதப்புரையினை, அதன் ஐந்து உறுப்பினர்களுக்கு குறையாதவர்களின் ஆதரவுடன் அங்கீகரித்தது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரை நிரந்தரமாக நியமிக்கும் வரை, 2025.05.23 தொடங்கி ஆறு மாத காலப்பகுதியொன்றுக்கு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் பணிபுரியும் வகையில், சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியான திரு ஜி.எச்.டீ. தர்மபால அவர்களை நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ சனாதிபதி அவர்களின் விதப்புரையினைப் பேரவை 2025 மே 22 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

  பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் தற்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் பதில் கடமை புரிவதையும், 2025.04.23 முதல் செயல்வலுப்பெறும் வகையில் அவரது தற்போதைய பதவிக் காலம் முப்பது நாட்கள் கொண்டவொரு காலப்பகுதியாக இருப்பதையும் அது 2025.05.23 முதல் செயல்வலுப்பெறும் வகையில் முடிவுறும் என்பதையும் பேரவை அவதானித்தது.

  அதற்கிணங்க, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு, அரசியலமைப்பின் 41இ (2) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒருவரை நிரந்தரமாக நியமிக்கும் வரை, 2025.05.23 தொடங்கி 06 மாத காலப்பகுதிக்கு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் பதில் கடமை அடிப்படையில் பணிபுரியும் வகையில், சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியான திரு ஜி.எச்.டீ. தர்மபாலவினை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை பேரவை ஐந்து உறுப்பினர்களுக்கு குறையாதவர்களின் ஆதரவுடன் அங்கீகரித்தது.

6. அரசியலமைப்பு நீங்கலாக, எழுத்திலான சட்டங்களின் மூலம் அரசியலமைப்புப் பேரவைக்குச் சாட்டப்படும் அல்லது குறித்தொதுக்கப்படும் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றல்

6.1. நலனோம்புகை நன்மைகள் சபைக்கான (WBB) உறுப்பினர்களின் நியமனம்

- நலனோம்புகை நன்மைகள் சபையின் உறுப்பினர் பதவிக்கு திரு நிமல் கொட்டவெலகெதர, திரு திலக் பத்திரகே, திரு பால மானகே சுமனரத்ன, திரு சமீர உதயந்த அல்விஸ், திருமதி நூர் றிஸ்னா அனீஸ் ஆகியோரை நியமிப்பதற்கு கௌரவ அமைச்சரின் விதப்புரை தொடர்பில் பேரவையின் இணக்கத்தைக் கோரி கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து கிடைத்த அறிவித்தலை, பேரவை 2025 மார்ச் 12 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

  தற்பொழுது சபையில் ஐந்து உறுப்பினர்கள் பணிபுரிவதையும், சபைக்குப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலனோம்புகை நன்மைகள் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜினாமாச் செய்வதன் மூலம் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படுதல் மூலம் அவர்கள் தங்களின் பதவிகளை வறிதாக்க வேண்டும் என்பதையும் பேரவை அவதானித்தது.

  ஆகையால், மேற்குறித்த அவதானிப்பை கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

6.2. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (OMP) உறுப்பினர்களின் நியமனம்

- காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு எச்.எம்.எம்.பீ. ஜயவர்தன மற்றும் திரு பி.எம்.டபிள்யு. சம்பத் பெரேரா ஆகியோர் இராஜினாமாச் செய்ததால் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கான நியமனங்கள் தொடர்பில் தரப்படுத்தப்பட்டு பட்டியல்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு 2025 பெப்ருவரி 05 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சைகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை, பேரவை 2025 மார்ச் 12 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பரிசீலித்தது.

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தற்போதைய ஆக்கவமைவினைப் பேரவை மீளாய்வு செய்ததுடன் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகச் (தாபிப்பு, நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றல்) சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள அதன் கடமைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அந்த அலுவலகத்தில் பன்மைவாதப் பிரதிநிதித்துவம் போதியளவில் இருப்பதை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியது.

விண்ணப்பதாரர்களின் தகைமைகளையும் தகுதியையும் பேரவை பரிசீலித்த பின்னர், குறித்த சட்டத்தின் பிரிவு 4 இன் பிரகாரம் காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவிக்கு நியமிப்பதற்காக திரு மிராக் விஜேசேக்கர ரஹீம் மற்றும் பேரவையின் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் விதந்துரைக்கப்பட்ட திரு வடிவேல் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை ஏகமனதாக விதந்துரைத்தது.

6.3. இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கான உறுப்பினர்களின் நியமனம்

- 2025 ஜூன் 12 முதல் செயல்வலுப்பெறும் வகையில் உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் முடிவடைதல், மற்றும் 2025 ஜூலை 06 மற்றும் 2025 ஆகஸ்ட் 25 ஆகிய தினங்களில் முறையே அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மேலும் மூன்று (03) பதவிகளில் வெற்றிடங்கள் நிகழவுள்ளமை காரணமாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தினை 2025 ஜூன் 18 அன்று கூடிய அதன் கூட்டத்தில் பேரவை கவனத்திற்கொண்டது.

  ஆகையால், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் பிரகாரம், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடத்திற்கும் மற்றும் இனிவரும் காலங்களில் ஏற்படும் பதவி வெற்றிடங்களுக்கும் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக பரிசீலிப்பதற்கு தகுதிவாய்ந்த தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு, பேரவை ஏகமனதாக தீர்மானித்தது.

6.4. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

- நீதிபதி (ஓய்வு) பி. ரோஹினி வல்கம, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வதாக பேரவைக்கு அறிவித்திருந்தார். அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு 12(1) (ஆ) இன் பிரகாரம் வெளியீட்டாளர்களின், பதிப்பாசிரியர்களின் மற்றும் ஊடகவியலாளர்களின் அமைப்புகளின் வகுதியின் கீழ், குறிப்பிட்ட

இராஜினாமாவையடுத்து ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை பேரவை கருத்திற்கொண்டது. அதற்கிணங்க, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்குக் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய அமைப்புகளிலிருந்து நியமனங்களுக்கான விதந்துரைத்தலைக் கோருவதற்கு, பேரவை ஒரு செய்திப்பத்திரிகை விளம்பரத்தை வெளியிட்டது.

அதற்கிணங்க, குறிப்பிட்ட விளம்பரத்தையடுத்து நியமிக்கப்படும் நபர்களின் தகைமைகளையும், தகுதியையும் மற்றும் செயலாற்றுகையையும் பேரவை கருத்திற்கொண்டதன் பின்னர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிற்கு நியமிப்பதற்காக, நீதிபதி துஷ்மந்த நிகால் சமரகோன் (ஓய்வு) அவர்களை ஏகமனதாக விதந்துரைப்பதென 2025 மார்ச் 12 அன்று கூடிய கூட்டத்தில் பேரவை தீர்மானித்தது.

- நீதிபதி உபாலி அபேரத்ன (ஓய்வு) தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவியிலிருந்து தான் இராஜினாமாச் செய்வதாகப் பேரவைக்கு அறிவித்திருந்தார்.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிப்பதற்கு விதந்துரைக்க வேண்டிய பொருத்தமான தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்காக பேரவை 2025.03.21 அன்று ஒரு செய்திப்பத்திரிகை விளம்பரத்தை வெளியிட்டது. விளம்பரத்தையடுத்து, உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட இருபது (20) விண்ணப்பங்களும் குறித்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்திற்கு இணங்காத ஐந்து (05) விண்ணப்பங்களும் கிடைத்திருந்தன. அதற்கிணங்க, பேரவையினால் விதந்துரைக்கப்படுகின்ற நபர்கள் ஏதேனுமொரு பகிரங்க அல்லது நீதிசார் பதவியை அல்லது வேறேதேனும் இலாபமீட்டும் பதவியை வகிக்ககூடாது அல்லது ஏதேனுமொரு தொழிலை மேற்கொள்ளக்கூடாது அல்லது ஏதேனுமொரு உயர் தொழிலைத் தொடரக்கூடாது என்பதைப் பேரவை உறுதிப்படுத்த வேண்டும் என்பதால், அவ்வாறு விதந்துரைக்கையில் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு 12(2) அ (iii) மற்றும் (v) ஆகியவற்றுக்கு இயைந்தொழுக விண்ணப்பதாரர்கள் விரும்புகின்றனரா என்பதை அவர்களிடமிருந்து கேட்டறிவதென 2025 ஏப்ரல் 22 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை தீர்மானித்தது.

அதனையடுத்து, அந்த விண்ணப்பதாரர்களைத் தரப்படுத்திப் பட்டியலிடுவதற்கும் 2025.06.04 அன்று அவர்களை ஒரு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கும் 2025 மே 20 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை தீர்மானித்தது.

கலந்துரையாடிய பின்னர், இந்த விடயத்தை அடுத்த கூட்டத்தின்போது மேலும் பரிசீலிப்பனெ 2025 ஜூன் 18 அன்று கூடிய கூட்டத்தில் பேரவை தீர்மானித்தது.

6.5. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) உறுப்பினர் பதவிற்கான நியமனம்

- பேரவை 2024.12.31 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது தீர்மானித்தவாறு, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) உறுப்பினர் பதவிற்கு விதந்துரைக்கப்பட்டுப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நபர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியிருந்தது.

  பெயர்குறித்து மேற்கொள்ளப்பட்ட நியமனங்களைப் பேரவை பரிசீலித்தது. எவ்வாறாயினும், 2025 ஜனவரி 03 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது அவர்களின் தகுதியைப் பரிசீலித்ததன் பின்னர், நீதிபதி டபிள்யு.ஏ. களுஆராச்சி மற்றும் பேராசிரியர் டபிளியு.டீ.ஏ.எஸ். ரொட்ரிகோ ஆகியோர் நிமனங்களை ஏற்காததனால் வெற்றிடமாகியிருந்த குறிப்பிட்ட பதவிக்கு, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படும் நிபுணத்துவத்தையும் தகைமைகளையும் கருத்திற்கொண்டு, கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து புதிய விதப்புரைகளைக் கோருவதெனப் பேரவை தீர்மானித்தது.

- நீதிபதி டபிளியு. ஏ. களுஆராச்சி மற்றும் பேராசிரியர் டபிளியு.டீ.ஏ.எஸ். ரொட்ரிகோ ஆகியோர் நியமனங்களை ஏற்காததால் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பேராசிரியர் எல். சமரநாயக்க மற்றும் திரு ஜி.ஏ.எஸ். கலகம ஆராச்சி ஆகியோரை நியமிப்பதற்கான விதப்புரைக்காகப் பேரவையின் இணக்கத்தைக் கோரி கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து கிடைத்த அறிவித்தலைப் பேரவை பரிசீலித்தது.

  குறிப்பிட்ட விதப்புரைகளைப் பரிசீலித்த பேரவை, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 5 இன் பிரகாரம் நிபுணத்துவத்தினையும் தகைமைகளையும் மற்றும் தகைமையீனங்களையும் கருத்திற்கொண்டு, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக

பேராசிரியர் எல். சமரநாயக்க அவர்களை நியமிப்பதற்கான கௌரவ அமைச்சரின் விதப்புரைக்கு இணக்கம் தெரிவிப்பதென 2025 ஏப்ரல் 22 அன்று கூடிய அதன் கூட்டத்தின்போது பேரவை ஏகமனதாக இணங்கியது. எனினும், நிலவுகின்ற பதவி வெற்றிடம் தொடர்பில், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக ஒருவரை நியமிப்பதற்கு சட்டத்துறையைப் பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு பெயர்குறித்த நியமனத்தினை மேற்கொள்ளுமாறு கௌரவ அமைச்சரிடம் வேண்டுகோள் விடுப்பதெனப் பேரவை தீர்மானித்தது.

- அதற்கிணங்க, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிற்கு திரு ஏ.ரீ. ஹேவகே அவர்களை நியமிப்பதற்கான கௌரவ அமைச்சரின் விதப்புரைக்குப் பேரவையின் இணக்கத்தை கோருகின்ற கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து கிடைத்த அறிவித்தலை, 2025 ஜூன் 18 அன்று கூடிய அதன் கூட்டத்தில் பேரவை பரிசீலித்தது. குறித்த விடயத்தைப் பரிசீலித்த பேரவை, விதந்துரைக்கப்பட்ட நபர் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 5 இன் பிரகாரம், ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கின்றார் மற்றும் நியமிக்கப்படுவதிலிருந்தும் தகுதியற்றவர் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவரிடமிருந்து ஒரு சத்தியக்கடதாசியை பெற்றுக்கொள்வதற்கு இணங்கியதுடன், விதந்துரைக்கப்பட்ட நபரைப் பேரவையுடனான ஒரு கலந்துரையாடலுக்கு அழைப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானித்தது.

6.6. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்திற்கான பேரவையின் விதப்புரை

- 2024.12.31 அன்று நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பூரணமான மதிப்பீட்டு அறிக்கையைப் பேரவை பரிசீலித்ததுடன், தெரிவுக்காகப் பேரவையினால் ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் தெரிவடிப்படை மற்றும் நடைமுறை என்பவற்றுக்கு அமைவாக, சகல விண்ணப்பதாரர்களும் முழுப் பேரவையின் உறுப்பினர்களாலும் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

விரிவாகக் கலந்துரையாடிய பின்னர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு நியமிக்கப்படும் வகையில் கௌரவ சனாதிபதிக்கு

விதந்துரைக்கப்படுவதற்கான விண்ணப்பதாரி தொடர்பில் ஒரு வாக்கெடுப்பை நடத்துவதற்குப் பேரவை தீர்மானித்தது.

அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு திரு ரங்க ஸ்ரீநாத் அபேவிக்ரம திஸாநாயக்க அவர்களை விதந்துரைப்பதென 2025 ஜனவரி 07 அன்று கூடிய பேரவையின் கூட்டத்தில் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தீர்மானித்தனர்.

6.7. பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் நியமனம்

- பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் ஐந்து பதவிநிலைகளுக்காக விதந்துரைப்பதற்குப் பொருத்தமான தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களை/பெயர்குறித்த நியமனங்களை அழைக்கும் பொருட்டு பேரவை ஒரு செய்திப்பத்திரிகை விளம்பரத்தை வெளியிட்டது. அந்த விளம்பரத்தையடுத்து, உரிய திகதிக்குப் பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள், இரட்டிப்பு விண்ணப்பங்கள், உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வடிவில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் உள்ளடங்கலாக மொத்தம் நூற்றி எண்பத்து ஒரு (181) விண்ணப்பங்கள்/பெயர்குறித்த நியமனங்கள் கிடைத்திருந்தன.

கலந்துரையாடிய பின்னர், 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பெண்கள் ஊக்குவிப்புச் சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தேவைப்பாட்டின் (சட்டம் அல்லது சட்டவாக்கம், தொழிற்சங்கவியல், முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், பொருளாதார அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, பெண்கள் வலுப்படுத்துகை அல்லது பெண்களின் தொழில்வாய்ப்புக்கான சாத்தியத்தை அதிகரிப்பதற்குக் கடப்பாடு கொண்டுள்ளமை) பிரகாரம், விண்ணப்பதாரர்களை அவர்களின் நிபுணத்துவப் பரப்பின் அடிப்படையில் பேரவை வகைப்படுத்தியது.

அதற்கிணங்க, விண்ணப்பதாரர்களின் ஆற்றல்கள், தகைமைகள் மற்றும் பொருத்தம் என்பவற்றினைப் பரிசீலித்த பேரவை, அவர்களைத் தரப்படுத்திப் பட்டியலிட்டதுடன், அவ்வாறு பட்டியலிட்ட விண்ணப்பதாரர்களை 2025 ஜூலை 09 மாதம் நடத்தப்படும் ஒரு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதென 2025 ஜூன் 18 அன்று கூடிய கூட்டத்தில் தீர்மானித்தது.

7. பேரவையின் கடமைகளையும் செயற்பாடுகளையும் செயற்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான விதிகளை உருவாக்குதல்

அரசியலமைப்பின் 41எ(3) எனும் உறுப்புரையினால் ஆணை வழங்கப்பட்டுள்ளவாறு, பேரவை அதன் கடமைகளையும் செயற்பாடுகளையும் செயற்படுத்துவது மற்றும் நிறைவேற்றுவது தொடர்பில் வரையப்பட்டுள்ள விதிகளைத் மீளாய்வு செய்யும் செயன்முறையினை மேற்கொண்டு வருகின்றது.

அதனையடுத்து, 2005 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் நீதித்துறைக்கு நியமனங்களை மேற்கொள்வதில் ஐக்கிய இராச்சியத்தில் பின்பற்றப்படும் செயன்முறை தொடர்பாக நீதிபதி பிரெண்டா மார்ஜொரி ஹேல், ஹேல் சீமாட்டி - ரிச்மன்ட் மற்றும் ஐக்கிய இராச்சிய உயர் நீதிமன்ற முன்னாள் பிரதம நீதியரசர் ஆகியோருடன் பேரவை 2025 மே 20 அன்று ஒரு கலந்துரையாடலை நடத்தியது.

கௌரவ சட்டத்துறைத் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்காக வரைபு விதிகளை அனுப்பிவைப்பதென 2025 ஜூன் 18 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பேரவை தீர்மானித்தது. பேரவையின் உறுப்பினர்களுக்கான சட்டமுறையான பிரதிநிதித்துவம் தொடர்பில் நிறைவுபெறாத கொள்கைத் தீர்மானத்தின் விளைவைப் பரிசீலிப்பதற்கும் மற்றும் குறிப்பிட்ட கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டவுடன் அதனை கூட்டிணைப்பதற்கும் பேரவை தீர்மானித்தது.

8. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்திற்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெறுவதற்காகப் பின்வரும் எண்ணிக்கையிலான கோரிக்கைகள் கிடைத்துள்ளன. அவற்றுக்காக அனுப்பப்பட்ட பதில்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை	2
முழுமையாக/பகுதியளவில் பதில் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	2
மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	0

மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0
பதில் வழங்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0
நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0

9. பேரவையின் உறுப்பினர்களைப் பிரதிவாதியாகப் பெயரிட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள்

i. SC FR 29/2025

--//--